Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road,
Madurai-625 001.


மதுரை பதிப்பு *மணி 55 * ஓசை 115 உள்ளூர் - 25.04.2026 சனி விலை ரூ.4/- பக்கங்கள்-4 Website : http://maduraimaninews.com

Madurai Edition *Vol 55 * Issue 115 வெளியூர் - 26.04.2026 ஞாயிறு Price Rs. 4/- Pages -4 Email: maduraimaninews@gmail.com


ராஷ்டிரிய கெமிக்கல்ஸ் லிட். 188 காலியிடங்கள்!

கணவன் - மனைவி சண்டைகளை குறைக்க 'வாஸ்து குறிப்புகள்'

ராஜ்யசபா - தே.ஜ. கூட்டணி பலம் அதிகரிப்பு

பேடிஎம் பேமெண்ட்ஸ் வங்கியின் உரிமம் ரத்து: ஆர்பிஐ

## ராஜ்யசபாவில் தேஜ கூட்டணி பலம் அதிகரிப்பு!

புதுடெல்லி, ஏப். 25–

கட்சிதாவல்எதிரொலியாக, ராஜ்யசபாவில் தேஜ கூட்டணி எம்பிக்களின் எண்ணிக்கை 142 ஆக அதிகரித்துள்ளது. பெரும்பான்மைக்கு தேவையான 123 எம்பிக்களின் எண்ணிக்கையை விட 17 பேர் அதிகமாக இருக்கின்றனர்.



லோக்சபாவில் நிறைவேற்றப்படும் எந்தவொரு மசோதாவும் ராஜ்யசபாவில் நிறைவேற்றிய பிறகு தான் சட்டமாக உரு மாற முடியும். இதற்கு இந்த சபையில் பெரும்பான்மை எம்.பிக்கள் அவசியம். அரசியலமைப்பின்படி, ராஜ்ய சபாவின் அதிகபட்ச எம்.பி.க்கள் எண்ணிக்கை 250.

இதில் 238 பேர் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலிருந்தும், 12 பேர் ஜனாதிபதியாலும் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் ஆறு ஆண்டுகள் பதவி வகிக்கின்றனர்.

தற்போது ஆம் ஆத்மி கட்சியை சேர்ந்த ஏழு எம்பிக்கள் இணைந்துள்ளதன் மூலம், ராஜ்யசபாவில் பாஜவின் பலம் 113 ஆக உயர்ந்துள்ளது. ஒட்டுமொத்த தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பலம் 142ஐ எட்டியுள்ளது. ராஜ்யசபாவின் தற்போதைய மொத்த பலம் 244ஆக உள்ள நிலையில், பெரும்பான்மைக்குத் தேவையான 123 இடங்களைக் காட்டிலும் தேஜ கூட்டணியின் எம்பிக்கள் எண்ணிக்கை கூடுதலாக தான் 17 பேர் இருக்கின்றனர்.

கடந்த பல ஆண்டுகளாக, பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் தலைவர்கள் பாஜவில் இணைந்து வந்தாலும், ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த 7 ராஜ்யசபா எம்.பி.க்கள் ஒரே நாளில் பா.ஜ.வில் இணைந்தது முக்கியமாக கருதப்படுகிறது.

## டிசம்பருக்குள் தேசிய நெடுஞ்சாலைகளில் தடையற்ற சுங்கக் கட்டண வசூல் முறை! மத்தியஅமைச்சர் நிதின் கட்கரி!

டெல்லி, ஏப் 25–

தேசிய நெடுஞ்சாலைகளில் டிசம்பருக்குள் தடையற்ற சுங்கக் கட்டண வசூல் முறை அமல் செய்யப்பட உள்ளதாக தலைநகர் டெல்லியில் நடைபெற்ற இரண்டாவது தளவாடங்கள் ஆற்றல் மாநாடு மற்றும் விருதுகள் 2026 நிகழ்ச்சியில் பங்கேற்ற மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.




இம்முறையின் கீழ், வாகனங்கள் சுங்கச்சாவடிகளில் நிற்கத் தேவையின்றி, அதிநவீன ANPR கேமராக்கள் மற்றும் FASTag கருவிகள் வாயிலாக அடையாளம் காணப்பட்டு, அதனடிப்படையில் சுங்கக் கட்டணம் வசூலிக்கப்படும் என்றும் முதல்கட்டமாக குறிப்பிட்ட சுங்கச்சாவடிகளில் இந்த நடைமுறை அமல்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## ஆம் ஆத்மியின் கதை!



புதுடெல்லி, ஏப். 25–

ஊழலுக்கு எதிராக சமூக போராட்ட ஆர்வலர் அன்னா ஹசாரே நடத்திய போராட்டத்தில் முக்கிய பங்காற்றியவர் அரவிந்த் கெஜ்ரிவால். 2012ல் ஆம் ஆத்மி என்ற கட்சியை துவக்கினார். 2013ல் டில்லி சட்டசபை தேர்தலில் முதல்முறையாக போட்டியிட்டு 28 இடங்களைப் பிடித்து காங்கிரஸ் ஆதரவுடன் ஆட்சி அமைத்தார்.

தொடர்ந்து 2015ல் 70–க்கு 67 இடங்களையும், 2020ல் 62 இடங்களையும் இந்தக்கட்சி வென்று அமோக வெற்றி பெற்றது. பின்னர் பஞ்சாப் மாநில சட்டசபை தேர்தலில் தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றியது. இதனால் தேசிய அளவில் கவனத்தை ஈர்த்து மாநிலக் கட்சி அந்தஸ்தைப் பெற்றது. ஆனால் தற்போது அந்த கட்சி உடைய துவங்கி உள்ளது. சில ஆண்டுகளில் இந்த கட்சியை சேர்ந்த சில முக்கிய தலைவர்கள் பாஜகவில் இணைந்தனர். தொடர்ந்து ஊழல் குற்றச்சாட்டு, டில்லியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் உள்ளிட்ட காரணங்களால் இக்கட்சி பல சவால்களை எதிர் கொண்டு வருகிறது. 2015 முதலே அக்கட்சியில் முக்கிய பொறுப்பில் இருந்தவர்கள் விலகினர். அது நேற்று வரை தொடர்ந்தது. நேற்று ஒரே நாளில் 7 எம்பிக்கள் விலகினர்.

இதுவரை அக்கட்சியலிருந்து விலகிய முக்கிய தலைவர்கள், எம்பிக்கள் மற்றும் எம்எல்ஏ.,க்கள்:

**எம்பிக்கள்**

ஆம் ஆத்மி கட்சிக்கு 10 மாநிலங்களவை எம்பிக்கள் உள்ளனர். ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் ஆம் ஆத்மி கட்சி தனது கொள்கையில் இருந்து விலகிவிட்டதாக கூறி அக்கட்சியை சேர்ந்த 7 எம்பிக்களான, ராகவ் சத்தா, சந்தீப் பதக், அசோக் மிட்டல், ஹர்பஜன் சிங், ராஜீந்தர் குப்தா, விக்ரம் சாஹ்னி, ஸ்வாதி மாலிவால் ஆகியோர் விலகி பா.ஜ.,வில் இணைந்தனர்.

மொத்தம் உள்ள 10 மாநிலங்களவை உறுப்பினர்களில் 7 பேர் (மூன்றில் இரண்டு பங்கு) விலகியுள்ளதால், அவர்கள் மீது கட்சித் தாவல் தடைச் சட்டம் பாயாது என்பது குறிப்பிடத்தக்கது.

யார் இவர்கள்:

* ராகவ் சத்தா (Raghav Chadha): ஆம் ஆத்மி கட்சியின் தொடக்க காலத்திலிருந்தே இருந்தவர் மற்றும் கட்சியின் முக்கிய முகம்.
* சந்தீப் பதக் (Sandeep Pathak): கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் மற்றும் பஞ்சாப் தேர்தல் வெற்றியில் முக்கிய பங்காற்றியவர்.
* சுவாதி மாலிவால் (Swati Maliwal): டில்லி மகளிர் ஆணையத்தின் முன்னாள் தலைவர்.
* ஹர்பஜன் சிங் (Harbhajan Singh): முன்னாள் கிரிக்கெட் வீரர்.
* அசோக் மிட்டல் (Ashok Mittal): லவ்லி புரொபஷனல் பல்கலைக்கழகத்தின் நிறுவனர்.
* விக்ரம் சாஹ்னி (Vikram Sahney): தொழிலதிபர்.

**கடந்த காலங்களில் விலகிய முக்கியமானவர்கள்:**

ஆம் ஆத்மி கட்சி தொடங்கப்பட்ட காலத்திலிருந்து பல்வேறு காரணங்களால் பல முக்கிய தலைவர்கள் வெளியேறியுள்ளனர்:

**தலைவர்/காரணம் / தற்போதைய நிலை**

யோகேந்திர யாதவ் & பிரசாந்த் பூஷன் உட்கட்சி மோதலால் 2015–ல் நீக்கப்பட்டனர் (சுயராஜ் இந்தியா கட்சி).

கிரண் பேடி கட்சி தொடங்குவதற்கு முன்பே விலகி பாஜகவில் இணைந்தார். குமார் விஸ்வாஸ் தலைமை மீதான அதிருப்தியால் கட்சியிலிருந்து விலகி அரசியலில் இருந்து ஒதுங்கினார். சாஜியா இல்மி 2015–ல் விலகி பாஜகவில் இணைந்தார்.

கபில் மிஸ்ரா 2017–ல் ஊழல் புகார்களை முன்வைத்து வெளியேறி பாஜகவில் இணைந்தார். ஆஷிஷ் கேதான் 2018–ல் தனிப்பட்ட காரணங்களுக்காக விலகினார். கைலாஷ் கெலாட் டில்லி அமைச்சர் பதவியிலிருந்து சமீபத்தில் விலகியவர்.

விலகலுக்கான பொதுவான காரணங்கள்:

* கட்சித் தலைமையுடன் ஏற்பட்ட அதிகார மோதல்.
* மதுபானக் கொள்கை தொடர்பான ஊழல் வழக்குகள் மற்றும் கைது நடவடிக்கைகள்.
* கட்சி அதன் ஆரம்பகால லட்சியங்களில் இருந்து விலகிச் செல்வதாகக் கூறி முன்வைக்கப்படும் விமர்சனங்கள்.
* இந்த மாற்றங்கள் வரும் பஞ்சாப் மற்றும் டில்லி தேர்தல்களில் ஆம் ஆத்மி கட்சிக்கு பெரும் சவாலாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கொளுத்தும் வெயிலில் மக்களுக்கு புது பிரச்சினை!! தமிழ்நாட்டில் மின்வெட்டா?

### அதிகரிக்கும் மின் தேவை!!




சென்னை, ஏப். 25–

தமிழ்நாட்டில் தற்போது கோடைக்காலம் தொடங்கியுள்ளது. ஏற்கனவே பல மாவட்டங்களில் வெயில் 100 டிகிரிக்கு மேல் பதிவாகி வருகிறது. சேலம், ஈரோடு, சென்னை என பல மாவட்டங்களிலும் காலை 10 மணிக்கு மேல் வெளியே செல்ல முடியாத சூழல் உள்ளது. அனைத்து வீடுகளிலும் 24 மணி நேரமும் ஃபேன் இயக்கப்படுகிறது. அதே போல ஏசி பயன்படுத்தப்படும் வீடு, அலுவலகங்களில் எல்லாம் பெரும்பாலான நேரம் ஏசி இயக்கப்பட வேண்டிய கட்டாயத்தை இந்த வெயில் ஏற்படுத்தியுள்ளது. இதனால் அனைத்து வீடுகளுக்கு அடுத்த மாதம் கரண்ட் பில் எகிற போகிறது. இருந்தாலும் வெயிலை சமாளிக்க வேறு வழியில்லை. கொளுத்தும் வெயிலுக்கு மத்தியில் ஒரு அதிர்ச்சியான தகவல் வெளியாகியுள்ளது. மத்திய மின் துறை கோடை காலத்தில் டிமாண்ட் அதிகரித்து தென் இந்திய மாநிலங்களில் மின் பற்றாக்குறை அதிகரிக்கும் என தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகிய தென் மாநிலங்களின் மின் தேவை குறித்த தகவல்களை மத்திய மின்துறை வெளியிட்டுள்ளது. கடந்த ஆண்டு மார்ச் மாதத்துடன் இந்த ஆண்டு மார்ச் மாதத்தை ஒப்பிட்டு இந்த மின் தேவை பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, தென் மாநிலங்களின் தினசரி மின் தேவை 69,934 மெகாவாட்டில் இருந்து 73,805 மெகாவாட்டாக உயர்ந்துள்ளதாம். குறிப்பாக, தமிழகத்தின் மின் தேவை 19,679 மெகாவாட்டில் இருந்து 19,822 மெகாவாட்டாக அதிகரித்துள்ளது. தென் மாநிலங்களிலேயே மின் தேவையில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.

தமிழ்நாட்டின் மின் தேவை தினமும் சராசரியாக 16,000 மெகாவாட்டாக உள்ளதாம். இது வெயில் காலத்தில் குறிப்பாக அக்னி நட்சத்திரம் தொடங்கும் போது இன்னும் அதிகரிக்கும். கடந்த மாதமே 21ஆம் தேதியில் தமிழ்நாட்டின் மின் தேவை புதிய உச்சம் தொட்டு 21,060 மெகாவாட்டாக இருந்துள்ளது. வரும் நாட்களில் இது இன்னும் அதிகரிக்கும். ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளாவிலும் இதே நிலை தான் . எனவே மின் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளதாக மத்திய மின் துறை எச்சரித்துள்ளது. மின் பற்றாக்குறையை போக்க அரசு மின் வெட்டை கையில் எடுக்குமா என்ற அச்சம் அதிகரித்துள்ளது. இந்த வெயிலில் ஃபேன் இல்லாமல் இருக்கவே முடியாது என்ற நிலையில் மின்வெட்டு பிரச்சினையும் வந்து அவ்வளவு தான் என கவலைப்படுகின்றனர் மக்கள்.

இதற்கிடையே தமிழ்நாடு மின் வாரிய அதிகாரிகள் கோடையில் மின் தேவை எவ்வளவு இருக்கும், எவ்வளவு மின்சாரம் கிடைக்கும், பற்றாக்குறை எவ்வளவு ஏற்படும் என்பதை முன்கூட்டியே மதிப்பீடு செய்து, பற்றாக்குறையை சமாளிக்க, மின் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளனர். எனவே தற்போதைக்கு மின்வெட்டு பிரச்சினை இருக்காது என்றே எதிர்பார்க்கலாம்.

## கொடைக்கானல் புறப்பட்டார் முதல்வர்!



சென்னை, ஏப். 25–

சட்டமன்றத் தேர்தல் முடிவடைந்த நிலையில், ஓய்வெடுப்பதற்காக முதல்வர் மு.க. ஸ்டாலின் கொடைக்கானல் புறப்பட்டார். சென்னை விமான நிலையத்திலிருந்து தனி விமானம் மூலம் தனது குடும்பத்துடன் மதுரை செல்கிறார்.

மதுரையிலிருந்து சாலை மார்க்கமாக கொடைக்கானல் செல்லும் முதல்வர், அங்கு சில நாட்கள் ஓய்வெடுக்கிறார்.

## சென்னை சாலைகளில் அதிநவீன வழிகாட்டிப் பலகைகள் அமைக்க மாநகராட்சி திட்டம்!




சென்னை, ஏப். 25–

சென்னை மாநகரின் முக்கியச் சாலைகளில் போக்குவரத்தைச் சீரமைக்கவும், விபத்துகளைக் குறைக்கவும் ரூ.20 கோடி மதிப்பீட்டில் அதிநவீன வழிகாட்டிப் பலகைகள் அமைக்க மாநகராட்சி திட்டம். இந்த வழிகாட்டி பலகைகளில் எழுத்துக்களை விட, படங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட உள்ளது. தமிழ் தெரியாதவர்கள் அல்லது வெளி மாநிலத்தவர்கள் கூட எளிதாக சாலைகளை அறிந்துகொள்ள முடியும்.

## தேனி மாவட்டம் கம்பம் நகரில் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் உடல் சிதறி இருவர் உயிரிழப்பு!



தேனி, ஏப். 25–

தேனி மாவட்டம் கம்பம் நகரில் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் உடல் சிதறி இருவர் உயிரிழந்தனர். பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் தீனதயாளன், சூர்யா ஆகியோர் உயிரிழந்த நிலையில் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார். போலீசார், தீயணைப்பு துறையினர் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்

தலையங்கம் மதுரை மணி
சனிக்கிழமை 25.04.2026
விசுவாவசு தமிழ் வருடம்
சித்திரை மாதம் 12-ம் தேதி

## ஜாக்பாட் அடிக்கும் சிறு பட்ஜெட் படங்கள்!



சினிமான்னாலே நமக்கு ஞாபகம் வர்றது பிரம்மாண்டமான செட்கள், வெளிநாட்டு லொகேஷன்ஸ், அப்புறம் கோடிக்கணக்கில் சம்பளம் வாங்குற சூப்பர் ஸ்டார்கள் தான். ஆனா, சமீபகாலமா இந்திய சினிமாவே ஆச்சரியப்படுற அளவுக்கு ஒரு பெரிய மாற்றம் நடந்துட்டு இருக்கு. பெரிய ஸ்டார் இல்லாம, வெறும் 5 அல்லது 10 கோடியில் எடுக்கப்படுற படங்கள், அசால்ட்டா 100 கோடி ரூபாயை வசூல் செஞ்சு 'ஜாக்பாட்' அடிக்குது. மஞ்சுமெல் பாய்ஸ், லவ் டுடே மாதிரியான படங்கள் இதற்குச் சிறந்த உதாரணம்.

இந்த வெற்றிகளுக்குப் பின்னாடி இருக்குற முதல் ரகசியம் 'எமோஷனல்'. ஒரு ரசிகன் தியேட்டருக்குள்ள போகும்போது அந்தப் படத்தில் வர்ற கேரக்டரைத் தன்னோடவோ அல்லது தன் நண்பர்களோடவோ ஒப்பிட்டுப் பார்க்கணும்னு நினைக்கிறான். மஞ்சுமெல் பாய்ஸ் படத்தையே எடுத்துக்கோங்க, அதுல வர்ற அந்த நட்பு, நம்ம ஊர் பசங்க கேங் மாதிரியே இருந்துச்சு. பெரிய மாஸ் என்ட்ரி, பன்ச் டயலாக் எதுவுமே இல்லாம, கதையோடு ஒட்டிப்போற உணர்வுகள் தான் மக்களைத் தியேட்டருக்கு இழுக்குது.

அடுத்த முக்கியமான விஷயம், Word of Mouth. முன்னாடி எல்லாம் படத்தோட விளம்பரத்துக்காக கோடிக்கணக்கில் செலவு பண்ணுவாங்க. ஆனா இப்போ, ஒரு சாதாரண ரசிகன் தன் சோசியல் மீடியா பக்கத்துல போடுற ஒரு பாசிட்டிவ் ரிவியூ, கோடிக்கணக்கான செலவு செய்யுற விளம்பரத்தை விட அதிக பவர்ஃபுல்லா இருக்கு. மக்கள் தங்களுக்குள்ளேயே பேசி ஒரு படத்தை ஹிட் ஆக்குறாங்க. இந்தத் தகவல் பரிமாற்றம் தான் சிறு பட்ஜெட் படங்களுக்கு பெரிய பலம். தொழில்நுட்ப ரீதியா பார்த்தா, இப்போ கேமராக்கள் மற்றும் எடிட்டிங் டூல்கள் ரொம்பவே எளிமையா கிடைக்குது. அதனால, குறைஞ்ச செலவுல கூட தரமான அவுட்புட் கொடுக்க முடியுது. இதனால தயாரிப்பாளர்களுக்கு ரிஸ்க் குறையுது, லாபம் பல மடங்கு அதிகமாகுது.

அதேபோல, மொழிகளைத் தாண்டி நல்ல கதைகளை மக்கள் ரசிக்க ஆரம்பிச்சுட்டாங்க. கேரளாவுல ரிலீஸ் ஆகுற ஒரு படம் தமிழ்நாட்டுல 50 கோடி வசூல் பண்ணுதுன்னா, அங்க வேலை செய்றது ஸ்டார் பவர் கிடையாது, அந்தப் படத்தோட ஆன்மா தான்.

இனிமேல் சினிமாங்கிறது வெறும் ஹீரோக்களோட பிம்பத்தை மட்டும் நம்பி இல்லை. புதுமையான கதைக் களம், நேர்மையான மேக்கிங், அப்புறம் ஆடியன்ஸை ஏமாத்தாத திரைக்கதை இருந்தா போதும், எந்தப் படமும் 100 கோடி கிளப்பில் இணையலாம். இது ஆரோக்கியமான சினிமாவுக்கான ஒரு நல்ல ஆரம்பம்!

## JCB இந்தியா, பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் (PMGSY) மூன்றாம் கட்ட நீட்டிப்பை வரவேற்பதோடு, வலுவான கிராமப்புற இணைப்புக்கும் ஆதரவளிக்கிறது

சென்னை, ஏப். 25–

கிராமப்புற இணைப்பை வலுப்படுத்தும் தேசிய உறுதிப்பாட்டை முன்னெடுத்து, பிரதான் மந்திரி கிராம சாலைத் திட்டம் (Pradhan Mantri Gram Sadak Yojana (PMGSY–III)) 2028 மார்ச் வரை நீட்டிக்கப்படும் இந்திய அரசின் முடிவை JCB India வரவேற்று பாராட்டியுள்ளது. கிராமங்களை சேவைகள் மற்றும் வளர்ச்சி மையங்களுடன் இணைக்கும் சாலை வசதிகளை மேம்படுத்துவது, மக்களின் அன்றாட அணுகலை உயர்த்தி உள்ளூர் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் என நிறுவனம் தெரிவித்துள்ளது. மேம்பட்ட கிராமப்புற சாலைகள் மருத்துவ சேவைகள், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வாய்ப்புகளை எளிதாக அணுக உதவுவதோடு, விவசாய விளைபொருட்களை விரைவாகவும் இழப்பின்றியும் சந்தைக்கு கொண்டு செல்ல உதவுகின்றன.

இதனால் விவசாயிகளுக்கு தாமதம் மற்றும் இழப்புகள் குறையும்; குடும்பங்களுக்கு நேர்மையான மருத்துவ உதவி மற்றும் தொடர்ச்சியான கல்வி கிடைக்கும் என JCB India கூறியுள்ளது.

JCB India நிறுவனத்தின் CEO & MD திரு. Deepak Shetty கூறுகையில், கிராமப்புற சாலைகள் வாழ்வாதாரம் மற்றும் அவசர உதவிகளை நேரடியாக பாதிக்கின்றன என்றார். PMGSY–III நீட்டிப்பு கடைசி மைல் இணைப்பை வலுப்படுத்தி நகர கிராம இணைப்பை மேம்படுத்தும் என்றும், Viksit Bharat இலக்கை நோக்கி அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

## வாடிக்கையாளர் மையம், பிராண்ட் வலிமை: நெஸ்லே இந்தியாவின் வலுவான காலாண்டு வளர்ச்சி!

சோலாடி , ஏப். 25–

Nestle India நிறுவனம், 31 மார்ச் 2026–இல் முடிவடைந்த நான்காவது காலாண்டில் இதுவரை இல்லாத அளவிலான வலுவான வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. உள்நாட்டு விற்பனை ரூ. 6,445 கோடியைத் தாண்டி, மொத்த விற்பனை 23.4% உயர்ந்துள்ளது.



இரட்டை இலக்க அளவிலான வால்யூம் வளர்ச்சி மற்றும் அதிகரித்த விளம்பர முதலீடுகள் காரணமாக இந்த முன்னேற்றம் ஏற்பட்டது. EBITDA லாப விகிதம் 26.3% ஆக வலுவாக நிலைத்துள்ளது.

முழு நிதியாண்டில் நிறுவனம் ரூ. 23,071.5 கோடி மொத்த விற்பனையை எட்டியதுடன், ரூ. 3,544.6 கோடி நிகர லாபத்தையும் பதிவு செய்துள்ளது. முக்கிய பிராண்டுகளான Maggi, KitKat மற்றும் Nescafe ஆகியவை சந்தைப் பங்கில் வளர்ச்சியைத் தொடர்ந்து உறுதிப்படுத்தியுள்ளன. உணவு, பானங்கள், பால் பொருட்கள், ஊட்டச்சத்து மற்றும் செல்லப்பிராணி உணவு உள்ளிட்ட அனைத்து பிரிவுகளும் இரட்டை இலக்க வளர்ச்சியை பெற்றுள்ளன.

நிறுவனம் செலவுத் திறன் மேம்பாடு, டிஜிட்டல் மாற்றம் மற்றும் தொழில்நுட்ப பயன்பாட்டை அதிகரித்து, செயல்திறனை உயர்த்தியுள்ளது. கிராமப்புற சந்தை விரிவாக்கம் மூலம் சுமார் 216,000 கிராமங்களுக்கு சென்றடைதல் அதிகரிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நுகர்வோர் மையப்படுத்தல், விற்பனை அளவு வளர்ச்சி, பிராண்டுகளில் மறுமுதலீடு மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த செயல்பாட்டு மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படும் என நிறுவனம் தெரிவித்துள்ளது.

## நுகர்வோர் மையத்தில் வலிமை: நெஸ்லே இந்தியா இரட்டை இலக்க வளர்ச்சியுடன் சாதனை காலாண்டு.

சென்னை , ஏப். 25–

Nestle India நிறுவனம் 31 மார்ச் 2026–இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான வலுவான நிதி செயல்திறன் பதிவு செய்துள்ளது. கடந்த பத்தாண்டுகளில் இல்லாத அளவில் காலாண்டு வளர்ச்சியை எட்டியுள்ள நிறுவனம், இரட்டை இலக்க வால்யூம் வளர்ச்சியால் இயக்கப்பட்டு, உள்நாட்டு விற்பனையை ரூ. 6,445 கோடியாக உயர்த்தியுள்ளது. மொத்த விற்பனை மற்றும் உள்நாட்டு விற்பனை முறையே 23% மேல் அதிகரித்துள்ளது.

இந்த செயல்திறனைப் பற்றி Manish Tiwary தெரிவித்ததாவது, அதிகரித்த விளம்பர முதலீடு, வலுவான பிராண்ட் செயல்பாடு மற்றும் அனைத்து தயாரிப்பு பிரிவுகளின் பங்களிப்பு ஆகியவை இந்த வளர்ச்சிக்கு காரணமாக இருந்ததாக கூறினார். மேலும், 26.3% EBITDA லாப விகிதம் மூலம் நிறுவனத்தின் லாப திறன் உறுதியாக இருப்பதையும் அவர் வலியுறுத்தினார்.



எதிர்காலத்திற்காக, நுகர்வோர் மையப்படுத்தல், ஊடுருவல் சார்ந்த வளர்ச்சி, பிராண்டுகளில் மறு முதலீடு மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகிய நான்கு முக்கிய முன்னுரிமைகள் நிறுவனம் கவனம் செலுத்த உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கிராமப்புற மற்றும் நகர்ப்புற சந்தைகளில் விநியோக விரிவாக்கம், புதுமைகள் மற்றும் டிஜிட்டல் திறன்கள் மூலம் தொடர்ந்து நிலையான வளர்ச்சியை அடைய நிறுவனம் உறுதியாக உள்ளது.

## Motorola edge 70 Pro அறிமுகம்: Sony LYTIA™ 710 கேமரா, Dimensity 8500 Extreme செயல்திறன் மற்றும் பிரீமியம் வடிவமைப்புடன் ரூ.36,999* ஆரம்ப விலை!

மதுரை , ஏப். 25–

motorola edge 70 pro ஸ்மார்ட்போன் புகைப்படத்தில் புதிய தரநிலையை அமைக்கிறது. இது Triple 50MP Pro–Grade Camera System உடன் வருகிறது, இதில் 50MP Sony LYTIA™ 710 சென்சார் (OIS + motoAI) முக்கிய பங்காற்றுகிறது. மேலும் 50MP Ultra–wide + Macro கேமரா மற்றும் 50MP Quad Pixel AF செல்ஃபி கேமரா உடன், அனைத்து கேமராக்களிலும் 4K 60FPS வீடியோ, Pantone™ Validated நிறங்கள் மற்றும் SkinTone™ துல்லியம் வழங்குகிறது.




இந்த சாதனம் MediaTek Dimensity 8500 Extreme மூலம் இயக்கப்பட்டு, 12GB LPDDR5X RAM மற்றும் 256GB UFS 4.1 ஸ்டோரேஜ் உடன் உயர்தர செயல்திறனை வழங்குகிறது. மேம்பட்ட vapor chamber cooling, 5200mm வெப்பக் கட்டுப்பாடு மற்றும் moto ai 2.0 ஆதரவுடன், gaming மற்றும் multitasking மிகவும் மென்மையாக நடைபெறுகிறது. இதன் 6.8" 144Hz 1.5K Quad–Curved AMOLED Display, 5200 nits brightness மற்றும் Gorilla Glass 7i பாதுகாப்புடன் பிரீமியம் பார்வை அனுபவத்தை வழங்குகிறது.

வடிவமைப்பில், Collections by Motorola மூலம் Satin–Luxe, Tailored Fabric மற்றும் Marble finishes அறிமுகமாகி, Pantone™ நிறங்களுடன் தனித்துவமான பிரீமியம் தோற்றத்தை தருகிறது. சாதனம் 6500mAh silicon–carbon battery மற்றும் 90W TurboPower™ charging (9 நிமிடத்தில் ஒரு நாள் சக்தி) உடன் வருகிறது. மேலும் IP68/IP69 durability, MIL–810H பாதுகாப்பு, மற்றும் Google Gemini, Copilot, Perplexity இணைந்த moto ai2.0 போன்ற அம்சங்களுடன், motorola edge 70 pro ஒரு முழுமையான AI–ஆற்றல்மிக்க ஃபிளாக்ஷிப் அனுபவத்தை வழங்குகிறது.

## PEDIGREE நாய் உணவு பிராண்டின் கிரேவி வரிசைக்கு இந்திய கிரிக்கெட் வீராங்கனை Jemimah Rodrigues தூதராக இணைப்பு புதிய முன்னிலை!

சென்னை . ஏப். 25–

மார்ஸ் இன்கார்ப்பரேட்டெட் நிறுவனம், இந்தியாவில் PEDIGREE பிராண்டிற்கான புதிய டிஜிட்டல்–முன்னுரிமை பிரச்சாரத்தை இன்று அறிவித்துள்ளது. இந்திய கிரிக்கெட் வீராங்கனை மற்றும் செல்லப்பிராணி பெற்றோர் Jemimah Rodrigues உடன் இணைந்து தொடங்கப்பட்ட இந்த முயற்சி, மாறிவரும் செல்லப்பிராணி பராமரிப்பு தேவைகளை கருத்தில் கொண்டு, சுவையையும் அறிவார்ந்த ஊட்டச்சத்தையும் ஒருங்கிணைக்கும் உணவளிப்பு முறையை ஊக்குவிக்கிறது.

இந்த பிரச்சாரத்தின் முக்கிய அம்சமாக PEDIGREE® கிரேவி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பரிந்துரைக்கப்பட்ட அளவில் வழங்கும்போது, இது 8 கோழிக் கல்லீரல்களின் புரதத்துக்கு சமமான ஊட்டச்சத்தையும் 100% முழுமையான மற்றும் சமநிலையான உணவையும் வழங்குகிறது.




வால்தம் செல்லப்பிராணிப் பராமரிப்பு அறிவியல் நிறுவனத்தின் ஆதரவுடன் உருவாக்கப்பட்ட இந்த ஈர உணவு (wet food), இந்தியாவில் கிரேவி பிரிவின் வளர்ச்சியையும் மார்ஸ் பெட் நியூட்ரிஷனின் முன்னணி நிலையும் வலுப்படுத்துகிறது.

இந்த பிரச்சாரம் கிரிக்கெட்–தீம் கொண்ட திரைப்படங்களின் மூலம் உயிரூட்டப்படுகிறது; இதில் ஜெமிமா ரோட்ரிக்ஸ் தனது செல்லப்பிராணியுடன் பகிரும் அன்றாட தருணங்கள் இடம்பெறுகின்றன. மார்ஸ் பெட் நியூட்ரிஷன் இந்தியாவின் CMO ஆயிஷா ஹூடா மற்றும் ஜெமிமா ரோட்ரிக்ஸ் ஆகியோர், செல்லப்பிராணிகளுக்கான சரியான ஊட்டச்சத்து மற்றும் சுவைமிக்க உணவின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றனர்.

இந்த முயற்சி, செல்லப்பிராணி பெற்றோர்களை அறிவியல் அடிப்படையிலான, முழுமையான உணவுத் தேர்வுகளுக்கு ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பிளம், "சரியான கெமிஸ்ட்ரி"யை கொண்டாடும் வகையில் கல்யாணி பிரியதர்ஷனின் இணைப்பு!

சென்னை, ஏப். 25–

இந்தியாவின் முன்னணி சருமப் பராமரிப்பு பிராண்டுகளில் ஒன்றாக பிளம், மலையாளம், தமிழ் மற்றும் தெலுங்கு திரையுலகில் தனது பங்களிப்புக்காக அறியப்படும் நடிகை கல்யாணி பிரியதர்ஷன் இணைந்துள்ளது. இந்த கூட்டாண்மை, ஒவ்வொரு வெற்றிக்கும் பின்னால் "சரியான கெமிஸ்ட்ரி" இருப்பதே முக்கியம் என்ற பிளம் நிறுவனத்தின் மையக் கருத்தை பிரதிபலிக்கிறது.

சருமப் பராமரிப்பு மற்றும் திரைப்படத் தயாரிப்பு ஆகியவற்றை ஒப்பிட்டு பார்க்கும் இந்த முயற்சி, வெற்றி என்பது தனித்தனியான கூறுகளால் அல்ல, அவை எப்போது ஒன்றாக இணைகின்றன என்பதாலேயே உருவாகிறது என்பதை வெளிப்படுத்துகிறது. இந்த கூட்டாண்மையில் பிளம் நிறுவனத்தின் முக்கிய தயாரிப்புகள், குறிப்பாக Niacinamide & Rice Water வரிசை, பிராந்தியத்திற்கேற்ற கதை சொல்லல் மூலம் முன்னிறுத்தப்பட்ட உள்ளது.

பிளம் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி சங்கர் பிரசாத் கூறுகையில், கல்யாணியின் உண்மைத்தன்மை, உறுதி மற்றும் ஒவ்வொரு விஷயத்திலும் காட்டும் கவனம் ஆகியவை பிராண்டின் தத்துவத்துடன் இயல்பாக பொருந்துவதால் இந்த கூட்டாண்மை மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது தெரிவித்தார்.

## மோன்ட்ரா எலக்ட்ரிக்: EVIATOR 350 & 350L அறிமுகம், eSCV வரிசை விரிவு



சென்னை, ஏப். 25–

முருகப்பா குழுமத்தின் மோன்ட்ரா எலக்ட்ரிக், தனது மின்சார சிறிய வர்த்தக வாகன (eSCV) வரிசையை விரிவுபடுத்தி, புதிய EVIATOR 350 (32kWh) மற்றும் EVIATOR 350L+ (50kWh) மாடல்களை அறிமுகப்படுத்தியுள்ளது. 600–க்கும் மேற்பட்ட வாகனங்கள் 65 லட்சம் கிலோமீட்டர் ஓடிய தரவுகளின் அடிப்படையில், பயன்பாடு சார்ந்த (பணிச்சுழற்சி) தேவைகளை கருத்தில் கொண்டு இம்மாதிரிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. 32kWh மாடல் 140 கி.மீ வரை பயணிக்கும் "கடைசி மைல் சாம்பியன்" ஆகவும், 50kWh EVIATOR 350L+ 300+ கி.மீ சான்றளிக்கப்பட்ட (200+ கி.மீ நடைமுறை) பயண தூரத்துடன் "மாரத்தான் ரன்னர்" ஆகவும் திகழ்கிறது. தற்போதைய 40kWh மாடலுடன் சேர்த்து, மூன்று பேட்டரி தேர்வுகள் மூலம் நகர்ப்புற விநியோகம் முதல் இடநகர லாஜிஸ்டிக்ஸ் வரை முழுமையான தீர்வை வழங்குகிறது.

மேலாண்மை இயக்குநர் ஜலஜ் குப்தா மற்றும் e–SCV பிரிவு தலைமை நிர்வாக அதிகாரி சஜு நாயர் தெரிவித்ததாவது, இந்த விரிவாக்கம் வாடிக்கையாளர்களுக்கு அதிக செயல்பாட்டு நேரம், குறைந்த மொத்த சொந்தச் செலவு மற்றும் தேவைக்கேற்ற வாகனத் தேர்வை வழங்கும் முக்கிய முன்னேற்றமாகும். புதிய மாடல்கள் ரூ.14.58 லட்சம் (32kWh) மற்றும் ரூ.16.86 லட்சம் (50kWh) என விலையிடப்பட்டு, விரைவில் டீலர்ஷிப்புகளில் கிடைக்கும்.



## கணவன் - மனைவி சண்டைகளை குறைக்க உதவும் 'வாஸ்து குறிப்புகள்'



மனிதர்களின் வாழ்க்கையில் வாஸ்து குறிப்புகளுக்கு முக்கிய பங்கு வழங்கப்படுகிறது; குறிப்பாக, தனி நபர் வாழ்க்கையில் எதிர்பார்த்த திருப்பங்களை கொண்டு வர இந்த வாஸ்து சாஸ்திரம் உதவும் என நம்பப்படுகிறது. மேலும், குடும்ப வாழ்க்கையில் கஷ்டம், நிதி பிரச்சனைகள், கணவன் – மனைவி இடையே காணப்படும் மனஸ்தாபங்களை முடிவுக்கு கொண்டு வரவும் இந்த வாஸ்து சாஸ்திர குறிப்புகள் உதவும் என நம்பப்படுகிறது. இந்நிலையில், அந்த குறிப்புகளை எப்படி பயன்படுத்துவது? வாஸ்து பரிகாரங்கள் மூலம் குடும்ப வாழ்க்கையில் மன அமைதி கொண்டு வருவது எப்படி? என பார்க்கலாம்.

**உணவு மேசையில் மாற்றம் செய்யுங்கள்!**

வீட்டில் உங்கள் குடும்ப உறவுகளுடன் இணைந்து உணவு உட்கொள்ளும் மேசையில் ஒரு சில மாற்றங்களை செய்வதன் மூலம், தம்பதியரிடையே காணப்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணலாம். அந்த வகையில்,

1. உங்கள் உணவு மேசையை வீட்டின் கிழக்கு அல்லது மேற்கு திசையில் வைப்பது நல்லது. மற்ற திசைகளில் வைப்பது, வாஸ்து பிரச்சனைகளுக்கு வழிவகுப்பதோடு – உறவுகளுக்கு மத்தியில் காணப்படும் மனஸ்தாபங்களை அதிகரிக்கும், மன அமைதியை பாதிக்கும் என கூறப்படுகிறது.
2. வீட்டில் பயன்படுத்தும் உணவு மேசை வட்டம், செவ்வகம், சதுரம், ஓவல் என பல்வேறு வடிவங்களில் கிடைக்கும் நிலையிலும், செவ்வக வடிவத்தை தேர்வு செய்வது நல்லது என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.
3. குடும்ப உறவுகள் அனைவரும் (நாள் ஒன்றுக்கு குறைந்தது ஒரு முறை) ஒன்றாக அமர்ந்து உணவு உண்பது நல்லது. இதன் போது குடும்ப தலைவருக்கு வடக்கு அல்லது கிழக்கு நோக்கி அமரும் நாற்காலியை ஒதுக்குங்கள்.

**சமையலறையில் செய்ய வேண்டிய மாற்றம்!**

வாஸ்து குறிப்புகளின் படி உங்கள் சமையலறையில் நீங்கள் செய்யும் பயனுள்ள மாற்றங்கள், தம்பதியரிடையே காணப்படும் வழக்குகள் மற்றும் வாக்குவாதங்களை குறைக்கும், பிரச்சனைகளுக்கு தீர்வு கொண்டு வரும் என நம்பப்படுகிறது.

1. வாஸ்து சாஸ்திர நிபுணர்களின் கூற்றுப்படி, வீட்டின் தென்கிழக்கு திசையில் சமையலறை அமைப்பது நல்லது. அக்னியுடன் தொடர்பு கொண்ட இந்த பகுதியில் சமையலறை வைப்பது, வீட்டில் நேர்மறை ஆற்றலை அதிகரிக்கும், தம்பதியரிடையே மகிழ்ச்சியை கொண்டு வரும்.
2. சமையலறையில் உள்ள நீர் குழாயில், நீர் கசிவு இல்லாத வகையில் பார்த்துக்கொள்ளுங்கள். மேலும், நீர் குழாய் மாசு படியாத அளவில் சுத்தமாக வைத்துக்கொள்வது நல்லது.
3. சமையலறையில் குப்பைகளை தேங்க விடுவது கூடாது. குறிப்பாக, உணவு கழிவுகளை வீட்டில் தேங்க வைப்பது கூடாது என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

**படுக்கையறையில் செய்ய வேண்டிய மாற்றங்கள்!**

கணவன் – மனைவி இடையே மனஸ்தாபங்கள் உண்டாகாமல் இருக்க, தம்பதியரின் படுக்கையறையில் வாஸ்து விதிமுறைகளை கடைபிடிப்பது அவசியம்.

1. வாஸ்து சாஸ்திரத்தின் படி, படுக்கையறையை தென்மேற்கு திசையில் அமைப்பது அவசியம்.
2. படுக்கையறையில் பயன்படுத்தும் படுக்கையின் தலைப்பகுதி, வாஸ்துப்படி தெற்கு அல்லது மேற்கு திசை நோக்கி இருப்பது நல்லது. இது, நேர்மறை ஆற்றலை அதிகரிப்பதோடு, உங்கள் உடல் ஆரோக்கியத்தையும் பாதுகாக்கும்.
3. படுக்கையறை சுவர்களுக்கு மிதமான வண்ணங்களை பூசுவது அவசியம். அடர் நிறங்களை பயன்படுத்துவது மனதளவில் உங்களை இறுக்கமாக மாற்றும், தம்பதியரிடையே கருத்து மோதல்களை அதிகரிக்கும். எனவே, மிதமான வண்ணங்களை பயன்படுத்துங்கள்.
4. படுக்கையறையில் உடைந்த கண்ணாடி, மீன் தொட்டி போன்ற கண்ணாடி பொருட்களுக்கு இடம் அளிப்பது கூடாது. கண்ணாடி போன்ற விரைவில் உடையும் பொருட்கள் மட்டும் அல்ல, கத்தி – ஊசி போன்ற கூர்மையான பொருட்களையும் வைப்பது கூடாது என நிபுணர்கள் வாஸ்து நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்!

**பொறுப்புத் துறப்பு:** இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பொதுவான ஜோதிட நம்பிக்கை மற்றும் மரபு வழி நம்பிக்கையின் அடிப்படையில் தொகுக்கப்பட்டவை. அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்ட தகவல்கள் அல்ல!

## அடுத்த தலைமை பயிற்சியாளர் ஆவாரா? பாஜகவில் இணைந்த ஹர்பஜன் சிங்!



புதுடெல்லி, ஏப். 25–

சுமார் நான்கு ஆண்டுகள் ஆம் ஆத்மி கட்சியில் பயணித்த ஹர்பஜன் சிங், தற்போது திடீரென அக்கட்சியிலிருந்து விலகி டெல்லியில் உள்ள பாஜக தலைமை அலுவலகத்தில், மூத்த தலைவர்கள் முன்னிலையில் தன்னை அக்கட்சியில் இணைத்துக் கொண்டார்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



### காலை எழுந்தவுடன் வெறும் வயிற்றில் தண்ணீர் குடிப்பதால் கிடைக்கும் நன்மைகள்..!



எழுந்தவுடன் வெறும் வயிற்றில் தண்ணீர் குடிப்பது ஒரு சிறிய பழக்கம் போல தோன்றினாலும், அதன் பின்னால் பல முக்கியமான ஆரோக்கிய நன்மைகள் இருக்கின்றன. இரவு முழுவதும் தூங்கும் போது உடலில் நீர் அளவு குறைந்து விடுகிறது. இதனால் காலை நேரத்தில் உடல் சிறிய அளவில் "நீர் வறட்சி" (Dehydration) நிலைக்கு சென்று விடுகிறது. இந்த நிலையில் முதலில் தண்ணீர் குடிப்பது உடலை மீண்டும் சீராக்க உதவுகிறது.

காலையில் எழுந்தவுடன் தண்ணீர் குடிக்கும் பழக்கம் ஒரு சிலருக்கு மட்டுமே உள்ளது. ஆனால் இந்தப் பழக்கம் உடல் நலத்திற்கு மிகவும் நல்லது என்பது யாருக்கும் தெரியாது. பலர் காலையில் எழுந்தவுடன் தேநீர் அல்லது காபி குடிக்கிறார்கள். ஆனால் இவற்றைக் குடிப்பது உடல் நலத்திற்கு நல்லதல்ல. ஏனெனில் அவை உடலில் நீர் வறட்சியை ஏற்படுத்தி, பல பிற பிரச்சனைகளையும் உண்டாக்குகின்றன. இப்போது, நாம் ஏன் தினமும் தண்ணீர் குடிக்க வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்வோம்.

**உடல் எடையை குறைக்க:** காலையில் எழுந்தவுடன் வெதுவெதுப்பான நீரைக் குடிப்பதால், ஆரோக்கியமான முறையில் உடல் எடையைக் குறைக்க முடியும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர். எலுமிச்சை சாறு மற்றும் தேன் கலந்து வெதுவெதுப்பான நீரைக் குடிப்பதால், கொழுப்பை வேகமாக எரிக்க முடியும். நீங்கள் உடல் எடையைக் குறைக்க விரும்பினால், காலையில் எழுந்தவுடன் தேநீர் அல்லது காபிக்கு பதிலாக வெதுவெதுப்பான நீரைக் குடியுங்கள்.

**செரிமானம்:** காலையில் எழுந்தவுடன் தண்ணீர் குடிப்பது செரிமானப் பிரச்சனைகளைத் தீர்க்க உதவும். இந்தத் தண்ணீர் உடலில் உள்ள நச்சுக்களை அகற்றி, நமது ஆரோக்கியத்திற்குப் பல நன்மைகளை வழங்குகிறது. உங்களுக்கு அடிக்கடி வாயுத்தொல்லை, அமிலத்தன்மை, அஜீரணம் போன்ற பிரச்சனைகள் இருந்தால், காலையில் எழுந்தவுடன் தண்ணீர் குடிப்பது இந்தப் பிரச்சனைகளைப் பெருமளவில் குறைக்கும்.

**சருமத்திற்கு நல்லது:** காலையில் எழுந்தவுடன் தண்ணீர் குடிப்பதால் உங்கள் உடல் நீரேற்றத்துடன் இருப்பது மட்டுமல்லாமல், உங்கள் சருமமும் ஈரப்பதத்துடன் இருக்கும். இது உங்கள் சருமத்தை அழகாகப் பொலிவூட்டுகிறது. தண்ணீர் உங்கள் உடலில் உள்ள நச்சுக்களை நீக்குகிறது. இது முகப்பரு மற்றும் கரும்புள்ளிகளை அகற்ற உதவுகிறது.

மலச்சிக்கல்: காலையில் எழுந்தவுடன் தண்ணீர் குடிப்பதால் செரிமான அமைப்பு வலுப்பெறுவது மட்டுமல்லாமல், மலச்சிக்கலில் இருந்தும் நிவாரணம் கிடைக்கிறது. தண்ணீர் குடிப்பதால் மலம் இளகி, உடலில் உள்ள கழிவுகளை விரைவாக வெளியேற்றுகிறது.

## சினிமா துளிகள்..!



### மே மாதத்தை குறி வைத்துள்ள 2 படங்கள்...!



கோடை விடுமுறையையொட்டி திரைப்படங்களை வெளியிட திட்டமிடப்படும். அந்த வகையில், மே மாதம் தமிழ் சினிமாவின் முன்னணி கதாநாயகர்களின் படங்கள் வெளியாக உள்ளதாக கூறப்படுகிறது.

மக்களால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட விஜய் நடிப்பில் உருவான 'ஜன நாயகன்' படம் அடுத்த மாதம் (மே) முதல் வாரத்தில் வெளியாகும் என சினிமா வட்டாரத்தில் தகவல் வெளியாகி உள்ளது. தணிக்கை சான்றிதழ், வழக்கு, தேர்தல் மற்றும் திரையரங்கு வெளியீட்டிற்கு முன்னதாக இணையத்தில் வெளியானது என பிரச்சனைகளை சந்தித்த 'ஜன நாயகன்' திரையரங்குகளில் வெளியாவது குறித்த அறிவிப்பு இன்னும் சில தினங்களில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்ததாக, இயக்குநர் கவுதம் வாசுதேவ் மேனன் இயக்கத்தில் நடிகர் விக்ரம் நடிப்பில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட திரைப்படமாக உருவாகி உள்ள படம் 'துருவ நட்சத்திரம்'. இப்படத்தில் கதாநாயகியாக ரீத்துவர்மா நடிக்க, பார்த்திபன், ராதிகா, சிம்ரன் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

# தமிழ்நாட்டில் மறுவாக்குப்பதிவு இல்லை - தேர்தல் ஆணையம்!

சென்னை, ஏப். 25–

234 தொகுதிகளை கொண்ட தமிழக சட்டசபைக்கு கடந்த 23–ந் தேதி தேர்தல் நடைபெற்று முடிந்தது. தேர்தலில் மொத்தம் 4 ஆயிரத்து 23 வேட்பாளர்கள் களமிறங்கினர். தேர்தலுக்காக தமிழகம் முழுவதும் 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டன. தமிழக சட்டசபை தேர்தலில் 85.15 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இந்த நிலையில், ஒரு சில தொகுதிகளில் வாக்குப்பதிவின் போது சிறிய அளவிலான மோதல்கள் மற்றும் இயந்திரக் கோளாறுகள் ஏற்பட்டதாகப் புகார்கள் எழுந்தன. குறிப்பாக, மயிலாடுதுறை மாவட்டத்தின் பூம்புகார் தொகுதியில் வாக்குச்சாவடி ஒன்றில் தலைமைக் காவலர் ஒருவர் குத்தப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இது போன்ற அசம்பாவிதங்கள் நடந்த இடங்களில் வாக்குப்பதிவு முறையாக நடைபெற்றதா என்பது குறித்துத் தேர்தல் ஆணையம் தீவிரமாக ஆய்வு செய்து வருகிறது. சென்னை ஹார்பர் தொகுதியில் திமுக மற்றும் தவெக (TVK) வேட்பாளர்களுக்கு இடையே 'பூத் ரிக்கிங்' (Booth Rigging) எனப்படும் வாக்குப்பதிவு முறைகேடு தொடர்பாக மோதல் வெடித்தது. இது குறித்துப் புகார் அளிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த குறிப்பிட்ட வாக்குச்சாவடியில் பதிவான வீடியோ ஆதாரங்களை (CCTV) தேர்தல் அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர். இதேபோல், சில இடங்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் (EVM) ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக வாக்குப்பதிவு நீண்ட நேரம் தடையானது. பின்னர் சரி செய்யப்பட்டு வாக்குப்பதிவு நடைபெற்றது




தமிழகத்தில் 2021 சட்டமன்றத் தேர்தலின்போது, சென்னையில் உள்ள ஒரு வாக்குச்சாவடியில் பழுதடைந்த காகித மாதிரி எந்திரம் ஒன்று இருசக்கர வாகனத்தில் கொண்டு செல்லப்பட்டதால், அங்கு மறுவாக்குப்பதிவுக்கு உத்தரவிடப்பட்டது. இந்த நிலையில், தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் மொத்தம் உள்ள 75,064 வாக்குச்சாவடிகள் எதிலும் மறுவாக்குப்பதிவு நடத்த வேண்டும் என பரிந்துரைக்கப்படவில்லை. எனவே தமிழ்நாட்டில் மறுவாக்குப்பதிவு இல்லை என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதே போல மேற்கு வங்க தேர்தலிலும் முதற்கட்ட வாக்குப்பதிவின் 44,376 வாக்குச்சாவடிகள் எதிலும் மறுவாக்குப்பதிவு பரிந்துரைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சபரிமலையில் தாழ்வாக பறந்த ஹெலிகாப்டர் விவகாரம்.. விசாரணையில் திடீர் திருப்பம்!

சபரிமலை, ஏப். 25–

சபரிமலை அய்யப்பன் கோவில் பகுதியில் ஹெலிகாப்டர்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தி மதியம் 1.30 மணிக்கு கொச்சி கடலோர காவல் படைக்கு சொந்தமான ஹெலிகாப்டர் சபரிமலை கோவிலுக்கு மேல் பகுதியில் கொடி மரம் அருகே மிகவும் தாழ் வாக பறந்து சென்றது. இந்த சம்பவம் சபரிமலையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதுதொடர்பாக கடலோர காவல் படை கொச்சி தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வழக்கமாக கடலோர காவல் படைக்கு சொந்தமான ஹெலிகாப்டர்கள் பயிற்சி நிமித்தமாக, அவ்வப்போது 60 முதல் 80 கி.மீட்டர் தூரத்திற்கு பறப்பது வழக்கம். ஆனால் மோசமான காலநிலையால், திசை மாறிய ஹெலிகாப்டர் சபரிமலை அருகே மிக தாழ்வாக பறக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக விளக்கம் அளித்தது.



இந்த சம்பவம் தொடர்பாக திருவிதாங்கூர் தேவஸ்தான தலைவர் ஜெயகுமார் கூறியதாவது:– சபரிமலையில் ஹெலிகாப்டர் தாழ்வாக பறந்த சம்பவம் தொடர்பாக ஏ.டி.ஜி.பி. ஸ்ரீஜித் விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டது.

இந்தநிலையில், மோசமான வானிலை காரணமாகவே ஹெலிகாப்டர் தாழ்வாக பறந்தது என கடலோர காவல்படை அளித்துள்ள விளக்கம் திருப்திகரமாக இல்லை. சபரிமலை கோவிலும் அதன் வளாகமும் மாநில அரசால் சிறப்புப் பாதுகாப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளதால், மோசமான வானிலை காரணமாக ஹெலிகாப்டர் தாழ்வான உயரத்தில் பறக்க நிர்பந்திக்கப்பட்டது குறித்து காவல்துறைக்கோ அல்லது மாவட்ட நிர்வாகத்திற்கோ எந்தத் தகவலும் தெரிவிக்கப்படவில்லை என கேரள ஏடிஜிபி விசாரணை அறிக்கையில் தகவல் வெளியாகி உள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக, பொதுமக்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் அல்லது பொதுப் பாதுகாப்பிற்கு ஊறு விளைவிக்கும் செயலைத் தெரிந்தே செய்ததற்காக, கேரள காவல்துறைச் சட்டத்தின் பிரிவு 118(e)–ன் கீழ் பம்பா காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது. இருப்பினும், முதல் தகவல் அறிக்கையில் இதுவரை யாரும் குற்றவாளியாகக் குறிப்பிடப்படவில்லை.

# தேர்தலை முன்னிட்டு சொந்த ஊர்களுக்கு சென்றவர்கள் திரும்ப வசதியாக 14,508 சிறப்பு பேருந்துகள் இயக்கம்!

சென்னை, ஏப். 25–

சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தங்களின் சொந்த ஊர்களுக்கு சென்றவர்கள் சென்னை மற்றும் பிற ஊர்களுக்கு திரும்பிடும் வகையில் இன்றும், நாளையும் 14,508 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளதாக அரசு விரைவுப் போக்குவரத்து கழக மேலாண் இயக்குநர் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:–



2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு பொதுமக்கள் சிரமமின்றி தங்கள் சொந்த ஊர்களுக்கு பயணம் செய்திடவும், வாக்குப்பதிவு முடித்து சென்னை மற்றும் பிற ஊர்களுக்கு திரும்பிடும் வகையில் தினசரி இயக்கக்கூடிய பேருந்துகளுடன் சிறப்பு பேருந்துகள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தேர்தல் முடிந்த பின்னர் இன்றும், நாளையும் பொதுமக்கள் சிரமமின்றி சென்னைக்கும் மற்ற ஊர்களுக்கும் பயணம் செய்திட ஏதுவாக இன்று (சனிக்கிழமை) தினசரி இயக்கக்கூடிய 2,092 பேருந்துகளுடன் கூடுதலாக 1,295 பேருந்துகளும், முக்கிய ஊர்களிலிருந்து பல்வேறு இடங்களுக்கு 2,500 சிறப்பு பேருந்துகளும், நாளை (ஞாயிற்றுக்கிழமை) சென்னைக்கு தினசரி இயக்கக்கூடிய 2,092 பேருந்துகளுடன் 3,184 சிறப்பு பேருந்துகளும், பிற ஊர்களுக்கு 3,345 சிறப்பு பேருந்துகளும் ஆக ஒட்டு மொத்தமாக 14,508 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இன்று 19,676 பயணிகளும் நாளை 47,001 பயணிகளும் முன்பதிவு செய்து பயணிக்க உள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் தொலைதூர பயணம் மேற்கொள்ள இருக்கும் பயணிகள் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்களது பயணத்திற்கு www.tnstc.in மற்றும் Mobile App மூலம் முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இச்சிறப்பு பேருந்து இயக்கத்தினை கண்காணிக்க அனைத்து பேருந்து நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே பயணிகள் மேற்கூறிய வசதியினை பயன்படுத்தி தங்களது பயணத்தினை மேற்கொள்ள இதன் மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# ஐ.பி.எல். போட்டி: மெட்ரோ ரெயிலில் இலவசமாக பயணிக்கலாம்..!

சென்னை, ஏப். 25–

மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:–



IPL 2026 போட்டியை காண செல்பவர்கள் ஸ்பான்சர் செய்யப்பட்ட பயணச்சீட்டுகளை பயன்படுத்தி சென்னை மெட்ரோ ரெயிலில் பயணிக்கலாம். பயணிகளின் வசதியை மேம்படுத்தவும், நகரில் நடைபெறும் முக்கிய விளையாட்டு நிகழ்வுகளுக்கு தடையற்ற பயணத்தை வழங்கவும், சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் CSK Crick–et Limited நிறுவனத்துடன் இணைந்து "IPL 2026" லீக் போட்டிகளை காண வரும் ரசிகர்களுக்காக, பிரத்யேக மெட்ரோ பயணங்களை வழங்க முன்வந்துள்ளது. அரசினர் தோட்டம் மெட்ரோ நிலையத்திற்கு மிக அருகில் அமைந்துள்ள சேப்பாக்கம் எம்.ஏ.சிதம்பரம் மைதானத்தில் நடைபெற உள்ள, சென்னை சூப்பர் கிங்ஸ் (CSK) மற்றும் குஜராத் டைட்டன்ஸ் (GT) அணிகளுக்கு இடையிலான IPL 2026 லீக் போட்டி எண் 37, ஏப்ரல் 26, 2026 அன்று நடைபெற உள்ளது. இந்த போட்டிக்காக ரசிகர்களுக்கு ஸ்பான்சர் செய்யப்பட்ட மெட்ரோ பயணச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளது.

ஸ்பான்சர் செய்யப்பட்ட IPL போட்டிகான நுழைவுச்சீட்டு வைத்திருப்பவர்கள், நுழைவுச்சீட்டில் (both Digital & Phys–ical) உள்ள தனித்துவமான QR குறியீட்டை தானியங்கி நுழைவு இயந்திரத்தில் ஸ்கேன் செய்து மெட்ரோவில் பயணிக்கலாம். இந்த சிறப்பு சலுகை ஒரு சுற்றுப் பயணத்திற்கு (2 நுழைவு மற்றும் 2 வெளியேறுதல்) பயன்படுத்தலாம். சென்னையில் செயல்பாட்டில் உள்ள எந்தவொரு மெட்ரோ ரெயில் நிலையத்திலிருந்தும் போட்டி நடைபெறும் மைதானத்திற்கு அருகிலுள்ள அரசினர் தோட்டம் மெட்ரோ ரெயில் நிலையத்திற்கு எந்தவித கட்டணமும் இல்லாமல் பயணிக்கலாம். போட்டி நடைபெறும் நாளன்று, மெட்ரோ ரெயில் சேவைகள் ஞாயிற்றுக்கிழமை கால அட்டவணையின்படி (Sunday timeta–ble) இயக்கப்படும். IPL 2026 போட்டியை காண செல்பவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இந்த வசதியை பயன்படுத்திக் கொள்ளுமாறு சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வேலை வாய்ப்பு

## ராஷ்டிரிய கெமிக்கல்ஸ் அண்ட் ஃபெர்டிலைசர்ஸ் லிமிடெட் 188 காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: ஆர்.சி.எஃப்.எல் ராஷ்ட்ரிய கெமிக்கல்ஸ் அண்ட் ஃபெர்டிலைசர்ஸ் லிமிடெட்
அறிவிப்பு எண்: 17022026
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
வேலைவாய்ப்பு வகை: நிரந்தரம்
மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 188 ஆபரேட்டர் (கெமிக்கல்) பயிற்சிப் பணியிடங்கள்
பணியிட மாற்றம்: மும்பை
தொடங்கும் தேதி: 11.04.2026 காலை 8:00 மணி
கடைசி தேதி: 27.04.2026 மாலை 5:00 மணி
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் மூலம் மட்டும்
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.rcfltd.com/

# மீன்வள ஆய்வாளர் பதவிக்கான கல்வித் தகுதி மாற்றம்!

சென்னை, ஏப். 25–

மீன்வள ஆய்வாளர் பதவிக்கான கல்வித் தகுதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி இனிமேல் பிஎப்எஸ்சி பட்டதாரிகள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

தமிழக அரசின் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்நிலை பணியின்கீழ் வரும் மீன்வள ஆய்வாளர் (Inspec–tor of Fisheries) பதவியானது நேரடி நியமன முறையிலும் பதவி உயர்வு மூலமாகவும் நிரப்பப்படுகிறது. நேரடி நியமனத்துக்கு டிஎன்பிஎஸ்சி போட்டித்தேர்வு நடத்தப்படுகிறது.

இதற்கான கல்வித் தகுதி மீன்வள அறிவியல் பட்டப்படிப்பு (பிஎப்எஸ்சி) அல்லது எம்எஸ்சி விலங்கியல், எம்எஸ்சி கடல்வாழ் உயிரியல் (மரைன் பயாலஜி), எம்எஸ்சி கடலோர மீன்வளர்ப்பு – இவற்றில் ஏதேனும் ஒரு படிப்பு அவசியம். எனினும் பிஎப்எஸ்சி பட்டதாரிகளுக்கே பணியில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

எம்எஸ்சி பட்டதாரிகள் மீன்வள ஆய்வாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம் என்றாலும் தகுதியான பிஎப்எஸ்சி பட்டதாரிகள் இல்லாவிட்டால் மட்டுமே அவர்கள் பரிசீலிக்கப்படுவர். ஆரம்ப காலத்தில் மீன்வள ஆய்வாளர் பதவிக்கான நேரடி நியமனத்தில் குறிப்பிட்ட சதவீத இடங்கள் பிஎப்எஸ்சி பட்டதாரிகளுக்கும் எம்எஸ்சி பட்டதாரிகளுக்கு தனித்தனியாக ஒதுக்கீடு செய்யப்பட்டு நியமனம் நடைபெற்று வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சூழலில் தற்போது மீன்வள ஆய்வாளர் பதவிக்கான கல்வித் தகுதியில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது. அதன்படி, இனிமேல் பிஎப்எஸ்சி பட்டதாரிகள் மட்டுமே நேரடி மீன்வள ஆய்வாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

இதுதொடர்பான அரசாணையை தமிழக அரசின் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலர் என். சுப்பையன் வெளியிட்டுள்ளார். டிஎன்பிஎஸ்சி மூலம் நேரடியாக மீன்வள ஆய்வாளராக பணியில் சேருவோர் மீன்வளத் துறை உதவி இயக்குநர், துணை இயக்குநர், இணை இயக்குநர், கூடுதல் இயக்குநர் என படிப்படியாக பதவி உயர்வு பெறலாம். மீன்வள ஆய்வாளர் பதவிக்கு கல்வித் தகுதி மாற்றப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டிருப்பதால் விரைவில் டிஎன்பிஎஸ்சி மூலம்நேரடி நியமனத்துக்கான அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாட்டில் வரையாடுகள் கணக்கெடுக்கும் பணி தொடக்கம்!

சென்னை, ஏப். 25–

தமிழ்நாடு முழுவதும் வரையாடுகள் கணக்கெடுக்கும் பணி ஏப்.25 முதல் 3 நாட்களுக்கு நடைபெறுகிறது. 176 இடங்களில் இந்த கணக்கெடுப்பு நடக்கிறது.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை Ph: 98659 88881



